[1987 ஏப்ரல் 25

தஞ்சை மாவட்டம், காவேரி பாசன வாய்க்கால்கள்

508. (*வினா எண். 8346). திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் காவேரி பாசன பகுதி வாய்க்கால்களையும் வடிகால்களையும் அரசு செலவிலேயே பராமரித்துக் கொடுக்க செயற்குறிப்பு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பி.டபிள்யூ.டி.யைப் பொறுத்தவரை, 'ஏ' சானல், 'பி' சானல் ஆகியவற்றை அவர்கள் செய்கிறார்கள். அதிலே ஒரு 'ரீச்' செய்து விட்டு, விட்டுவிடுகிறார்கள். ஆகவே, அடுத்த பகுதி பாதிக்கப்பட்ட பகுதியாக இருந்து, தண்ணீர்ப் பாசனத்திற்கு மிகவும் கஷ்டப்படுகிறது. ஆகவே, இந்த ஆண்டாவது அதை அரசு மறுபரிசீலனை செய்து, எங்கள் பகுதியிலே தண்ணீர் வரத்து கம்மியாக இருக்கக்கூடிய இந்த நேரத்தில், விவசாயிகளைக் காப்பாற்றுவதற்கு, எல்லா வாய்க்கால் வடிகால்களையும் மராமத்து செய்து, தண்ணீர் ஒழுங்காகப் போவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை 123 'ஏ' கிளாஸ் சானலை மட்டும்தான் இன்றைக்கு ரிப்பேர் செய்து கொண்டிருக்கிறோம். அதேபோல் 696 வடிகால் ரிப்பேர் செய்கிறோம். 36 ஆறுகளில் உள்ள அந்த பாசன வாய்க்கால்களைத்தான் நாங்கள் இன்றைக்கு ரிப்பேர் செய்து கொண்டிருக்கிறோம். மீதி எல்லாம், குடிமராமத்து முறையில், இரண்டாயிரம் ஆண்டுக் காலமாக உள்ள நடை முறையிலே செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூரிலிருந்து தண்ணீர் வரத்து ஒரு நிலை இல்லாமல் வந்து கொண்டிருக்கிற காரணத்தால்— திடீரென்று தண்ணீர் கிடைக்கிறது. திடீரென்று தண்ணீர்

1987 ஏப்ரல் 25]

நின்று விடுகிறது. அந்த நிலையிலே, தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்ற வாய்க்கால்கள் எல்லாம் சில இடங்களிலே மேடாகவும், சில இடங்களிலே பள்ளமாகவும் உள்ளதால், சரியான முறையில் நீர்ப்பாசனத்திற்கு வசதி இல்லாமல் இருக்கிறது. இந்தக் காலம் மிகவும் வறட்சியான காலமாக இருக்கின்ற காரணத்தால், இந்த ஆண்டு, அந்தப் பகுதி மக்களுக்கு வேலை கொடுப்பதற்கு வாய்ப்பாகவும், அந்த வாய்க்கால்களை தூர் எடுக்க வாய்ப்பாகவும், போதுமான விசேஷ நிதியை ஒதுக்கி இந்த ஆண்டிலே மராமத்து வேலைகளைச் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வருஷம் ஏறத்தாழ இதற்காக ரூ. $1\frac{1}{2}$ கோடி அளவுக்கு ஒதுக்கியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் எந்த வாய்க்கால் என்று குறிப்பிட்டுச் சொன்னால் அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டம் பாலாறு அணைக்கட்டு.

509—(*வினா எண் 9088) திரு. த. பழனி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் பாலாறு அணைக்கட்டில் உள்ள அணைக்காவலர்கள் எத்தனை பேர் ?

(ஆ) அதனை உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்சமயம் நான்கு கரைக்காவலர்கள் பணிபுரிகின்றனர்.

(ஆ) ஆம்.

திரு. த. பழனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் இருக்கிற பாலாறு அணைக்கட்டில் ஏற்கெனவே 12 கரைக் காவலர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். அந்த 12 பேரில் 8 கரைக் காவலர்கள் இறந்துவிட்ட பிறகு அந்த இடங்களுக்கு புதிதாக ஆட்களை நியமித்து அந்தப் பதவிகள் பூர்த்தி செய்யப்படவில்லை. அப்படிப்பட்ட இடங்களைப் பூர்த்தி செய்ய அரசு முன்வருமா என்று கேட்டுக் கொள்வதோடு, அப்படிச் செய்யும்போது இறந்து